தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11-9-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் துணை ஆட்சியர்களுக்கான திறன்மேம்பாட்டு பயிற்சி

தமிழ்நாடு அரசின் துணை ஆட்சியர்களுக்கான 7 நாள் பயிற்சி முகாம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செப்டம்பர் 7ம் நாள் துவங்கியது. இம்முகாமில் மாநிலம் முழுவதும் இருந்து வந்த 54 துணை ஆட்சியர்கள் பங்கு பெற்றனர்.

இப்பயிற்சியின் நோக்கம் வேளாண்மைக் கல்வி, இ-வேளாண்மை, விதை உற்பத்தி, தோட்டக்கலை மற்றும் மலரியல் துறைகள், மருத்துவப் பயிர்கள், அங்கக வேளாண்மை, அறுவடை பின்சார் தொழில்நுட்பம், இயந்திரமயமாக்குதல், காளான் உற்பத்தி போன்ற விவசாயம் சார்ந்த தொழில்களில் உள்ள தொழில்நுட்பங்களை சமுதாயத்திற்கு எடுத்துச் செல்லுதல் பற்றியதாகும்.

இதில் கலந்து கொண்ட 54 துணை ஆட்சியர்களுடன் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் நேர்முகக் கலந்துரையாடல் நடத்தினார். இதில் வேளாண்மை பயிலும் மாணவர்களின் எதிர்கால வேலை வாய்ப்பு, பேப்பர் இல்லா தேர்வு முறை, பாரம்பரிய விதைகளைப் பாதுகாத்தல், நீர்குலைகளைப் பாதுகாத்தல், பருவத்தே பயிர் செய்தல் ஆகிய தலைப்புகளில் கலந்துரையாடல் நடைபெற்றது. எதிர்கால சவால்களை எதிர்கொள்ளத் தேவையான தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுதல் மிக முக்கியமாக பொதுப் பணியில் ஈடுபடுவோருக்கு தேவை என்பதை அவர் வலியுறுத்தினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்